# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

## மானியக் கோரிக்கை எண். 17

# அறிவிப்புகள்
# 2016–2017


**ஓ.எஸ்.மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல்  துறை அமைச்சர்**

## 1 கைத்தறி நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்குதல்

தமிழ் நாட்டிலுள்ள **1,161** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையிலும், அவர்களின் வாழ்க்கைச் செலவினங்களைக் கருத்தில் கொண்டும், **01.04.2016** முதல் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்கள் பெறும் அடிப்படை கூலியில் **10** விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 2 நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்கள் திருத்தியமைத்தல்

நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கான திருத்திய ஊதிய விகிதங்களை பரிந்துரைக்க அமைக்கப்பட்ட ஊதியக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், 2016–2017–ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கான ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைத்து செயல்படுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 3 பரமக்குடியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் வடிவமைப்பகம் அமைத்தல்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தறித் துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்தும் பொருட்டு, பரமக்குடியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய ஜவுளி வடிவமைப்பகம் அமைத்திட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 4 கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்பு நல்வாழ்வு முகாம் நடத்துதல்

கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தை பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும் காது, மூக்கு, தொண்டை பரிசோதனை, கண் பரிசோதனை, பல் பரிசோதனை மற்றும் எலும்பு மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் அடங்கிய சிறப்பு நலவாழ்வு மருத்துவ முகாம்கள் நடத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 5 மதுரை மற்றும் திருநெல்வேலியில் 8 கோடி ரூபாய் மதிப்பில் விற்பனை வளாகங்கள் அமைத்தல்

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளை சந்தைப்படுத்தி அதிக அளவில் விற்பனை மேற்கொள்ளவும், தென்மாவட்ட மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையிலும், மதுரை மற்றும் திருநெல்வேலியில் **8** கோடி ரூபாய் மதிப்பில் விற்பனை வளாகங்கள் அமைக்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 6 கைத்தறி நெசவாளர்களுக்கு உயர்ரக தறிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களின் வேலைப் பளுவை குறைக்கவும், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியினை மேம்படுத்தவும், அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கவும், 2016–2017–ஆம் ஆண்டில் உயர்ரக தறிகள் மற்றும் இதர உபகரணங்கள் வழங்குவதற்காக 4.23 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 7 கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஊழியர்களின் ஊதியத்தினை திருத்தியமைத்தல்

கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை பணியாளர்களுக்கான திருத்திய ஊதிய விகிதங்களை பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில், மேற்படி நிறுவனங்களின் ஊழியர்களது ஊதியத்தினை திருத்தியமைத்து செயல்படுத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 8 கைத்தறி மற்றும் துணிநூல் சரக அலுவலகங்களுக்கு ஈப்பு வழங்குதல்

கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் கழிவு செய்யப்பட்ட நிலையில் உள்ள மூன்று ஈப்புகளுக்குப் பதிலாக, மூன்று புதிய ஈப்புகள் 17.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்க **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 9 தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் தானியங்கி தறிகள் நிறுவுதல்

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன், **80** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக இரண்டு புதிய தானியங்கி தறிகள் நிறுவிட, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 10 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்

வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும், அவர்களின் துணித் தேவைகளை வாங்கத்தூண்டும் பொருட்டும், கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் ரொக்க விற்பனையை மேம்படுத்தவும், நடப்பு **2016–2017**–ஆம் ஆண்டில் மேலும், ஐந்து கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை, **1.50** கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 11 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்துதல்

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பிற்கு, கண்காணிப்பு கேமரா பொருத்துதல் அவசியமென்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பு 2016–2017–ஆம் ஆண்டில் 50 விற்பனை நிலையங்களில் 15 இலட்சம் ரூபாய் செலவில், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 12 கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்

கோ-ஆப்டெக்ஸ் மூலம் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் நோக்கில், பல்வேறு இரகங்களில் கண்கவர் வண்ணங்களில் **2,000** புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 13 கோ—ஆப்டெக்ஸின் மின் வணிக விற்பனையை விரிவுபடுத்துதல்

மின் வணிகத்திற்கான சொந்த மின் வணிகதளத்தை நிறுவிய முதல் பிரதான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிறுவனம் கோ—ஆப்டெக்ஸ் ஆகும். மின் வணிக விற்பனையை மேலும் விரிவாக்கும் நோக்கில், மக்களிடையே அதிக ஆதரவு பெற்றுள்ள மின் வணிகதள நிறுவனங்களுடன் வியாபார ஒப்பந்தம் செய்ய, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

## 14 கைத்தறி நெசவு குறித்த விழிப்புணர்வு சுற்றுலா

இளந் தலைமுறை வாடிக்கையாளர்களுக்கு கைத்தறித் தொழிலின் மேன்மை மற்றும் கைத்தறி நெசவாளர்களின் திறமை ஆகியவற்றை புரிந்து கொள்ள வழிவகுக்கும் வகையில், ஐந்து கைத்தறி விழிப்புணர்வு சுற்றுலாக்கள் நடத்திட, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

**ஓ.எஸ்.மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**